2001 செப்டம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன், மறுபடியும் கேட்க வேண்டுமா?

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியிலே இது மிக முக்கியமான பிரச்சினை. அரசு மருத்துவமனை வளாகத்திலே ஆக்கிரமிப்பு இருப்பது உண்மை. அதை அகற்ற வேண்டிய பொறுப்பு அரசிடம் உள்ளது. தாலுக்கா மருத்துவமனையாக அந்த மருத்துவமனையின் அந்தஸ்தை உயர்த்தியபோது அந்த இடங்களிலே உள்ளவர்களைக் காலி செய்ய வேண்டுமென்று அங்கு ஆக்கிரமிப்பு செய்தவர்கள் அனைவரையும் அழைத்துக் கேட்டிருந்தோம். மாற்று இடம் கொடுத்தால் ஆக்கிரமிப்பை அகற்றி விடுகிறோம் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதை தாலுக்கா அலுவலகத்திலும் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கு ஏதாவது ஒரு இடத்திலே மாற்று இடத்தைக் கொடுத்து விட்டு, மருத்துவமனைக்குச் சொந்தமான இடத்தை அரசு உடனடியாக தன் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய முயற்சிக்கு அரசும் ஒத்துழைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 3, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

3—

விட்டு மனைகள்

9244—திரு. சி. சிவசாமி:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஒன்றியம், முதலிப்பாளையம் ஊராட்சி, மானூர் கிராமம் அருகில் வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடு கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தி மனைகள் சீர் செய்த பின்னர் மனைகள் விலை அதிகமாக உள்ளதால், விற்கப்படாமல் உள்ளதை விலை குறைத்து விற்க அரசு முன்வருமா?

[2001 செப்டம்பர் 10

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திருப்பூர் நகரத்தின் அருகிலுள்ள முதலிப்பாளையம் ஊராட்சியில் 99.88 ஹெக்டேர் நிலத்தை ரூ. 219.26 இலட்சத்திற்குக் கையகப்படுத்தி, 90 சதவீதம் உலக வங்கி நிதியுதவியின் கீழும் மற்றும் 10 சதவீதம் ஹட்கோ நிதியுதவியின் கீழும் 8,339 மேம்படுத்திய காலி மனைகளை 1997 ஆம் ஆண்டு விற்பதற்கு ஆரம்பித்துள்ளது. இதுவரை 2,774 மனைகள் விற்கப்பட்டுள்ளன. மீதம் 5,565 மனைகளை ஆய்வு செய்து, தேவைப்படின் விலை குறைப்பு பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமாகத் திகழ்கின்ற திருப்பூர் நகரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொந்தமான மாவட்டமான மதுரை மற்றும் விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல் போன்ற பல்வேறு மாவட்டங்களிலிருந்து மக்கள் வந்து திருப்பூர் நகரில் உள்ள பனியன் கம்பெனிகளில் தொழில் செய்து வருகிறார்கள். இதனால் குடியிருக்க வீட்டு மனைகள் அவசியம் தேவைப்படுகிறது. இதைக் கருத்தில்கொண்டு கடந்த காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் திருப்பூர் நகரின் அருகில் முதலிப்பாளையத்தில் சுமார் 250 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அடிப்படை வசதிகளைச் செய்தனர். அதற்குப் பிறகு வந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில் வீட்டு மனைகள் விற்கப்படவில்லை. இதனால் வீட்டுமனைகளின் விலை அசலுடன், வட்டியும்கூட மிகவும் அதிகமாக உயர்ந்து விட்டது. அங்கே வெளி மார்க்கெட்டில் குறைவான விலைக்கு இடங்கள் கிடைப்பதாலும் மேலும். அரசுக்கு நஷ்டத்தைத் தவிர்க்கின்ற விதமாக வட்டியைத் தள்ளுபடி செய்தும், உடனடியாக விற்பனை விலையைக் குறைத்து அரசு அறிவிப்பு வெளியிட்டால் வீட்டு மனைகளை வாங்குவதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்கப்படாமல் இருக்கிற வீடுகள் மற்றும் காலி மனைகளை விற்பனை செய்வதற்காக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து துறைகளினுடைய

2001 செப்டம்பர் 10]

அதிகாரிகளையும் அழைத்து, ஆய்வுக் கூட்டத்தினை நடத்தியபோது, விரைவிலே விற்பதற்காகவும், ஏன் இந்த மனைகள் விற்கப்படவில்லை என்கிற காரணத்தைக் கண்டறிவதற்காகவும் ஓர் உயர் மட்டக் குழுவினை நியமிக்கவேண்டுமென்று, ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். கூடிய விரைவிலே அந்த உயர்மட்டக் குழுவினை நியமிக்கவிருக்கிறோம். அந்த உயர்மட்டக் குழு அளிக்கும் பரிந்துரையின் பேரிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற வீட்டுமனைகளை வாங்குவோருக்கு வீடுகட்டுவதற்கு குறைவான வட்டியில் கடன் வசதி செய்து தரப்படுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு வீடு கட்டுவதற்குக் கொடுக்கப்பட்டிருந்த E.W.S. திட்டம் இரண்டு ஆண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே இதுபற்றி எடுத்துக்கூறியபோது இதை இந்த ஆண்டிலேயே செயல்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். நாளையதினம் நடைபெற இருக்கின்ற என்னுடைய மானியக் கோரிக்கையிலே இது சம்பந்தமான விளக்க அறிக்கையை அவையில் சமர்ப்பிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)